# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் 164/மா/2025**

**நாள்: 06.03.2026**

T. தயாளமூர்த்தி
சென்னை–40 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–8
பெருநகர சென்னை மாநகராட்சி

(2) நவ்தீப் குமார்
சென்னை–49 --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–40, அண்ணாநகர், 13வது பிரதான சாலை, கதவு எண்.1814 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T. தயாளமூர்த்தி என்பவரின் 03.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.04.2025 அன்று பெறப்பட்டு 164/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–40, அண்ணாநகர், 13வது பிரதான சாலை, கதவு எண்.1814 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T. தயாளமூர்த்தி என்பவர் தனது 03.04.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகின்றேன். பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு–95, பகுதி–21, மண்டலம்–8, எண் 36, சன்னதி தெரு, வில்லிவாக்கம், சென்னை–49 என்கிற முகவரியில் நான்கு பக்க இடைவெளி இல்லாமலும், விதிகளை மீறியும் கட்டப்பட்டுள்ள கட்டிடம் குறித்து புகைப்படத்துடன் கடந்த 10.04.2024, 18.08.2024 ஆகிய தேதிகளில் ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, வட்டார துணை ஆணையாளர் ஆகியோருக்கு புகார் அளித்திருந்தேன்.

மேலும், புகாரினை நினைவூட்டும் விதமாக கடந்த 17.02.2024, 27.02.2024 ஆகிய தேதிகளில் நினைவூட்டல் கடிதமும் அனுப்பியிருந்தேன். ஆனால், இதுவரை மேற்சொன்ன விலாசத்தில் விதிமீறிய கட்டிடம் தொடர்ந்து கட்டப்பட்டு வருகிறது. தொடர்ந்து புகார் அளித்தும் இதுவரை எவ்வித தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகவே, முறைமன்ற நடுவச் செயலர் ஆகிய தங்களிடம் முறையிடுகின்றோம். நிர்வாக சீர்கேடு மற்றும் ஊழலுக்கு வழி வகை செய்யும் மேற்சொன்ன அதிகாரிகள் மீது நடவடிக்கையும், விதிமீறிய கட்டிடம் மீது நடவடிக்கையும் எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் இணை இயக்குநர் / உதவி ஆணையாளர் 12.12.2025 நாளிட்ட கடிதம் Z.O.VIII.C.No.11062/2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"It is submitted that a letter dated 04.12.2025 was received from the Tamil Nadu Local Bodies Ombudsman stating that an inquiry will be held based on the complaint dated 03.04.2025 received from Mr. T. Dayalamurthy and directed to appear for personal hearing on 29.12.2025 along with the records and detailed report.

It is submitted that earlier the complainant herein had given complaints to the Greater Chennai Corporation stating that the owner of the building at Door No.36, Sannadhi Street, Villivakkam, Chennai-600 049, is carrying on the construction work unauthorizedly and requested to take enforcement action against the said building.

It is submitted that based on the complaints received from Mr. T. Dayalamurthy the building in question at Door No.36, Sannadhi Street, Villivakkam, Chennai-600 049, was inspected by the officials of Greater Chennai Corporation and after inspecting the building, enforcement action had been taken by issuing a Notice For Production of Documents dated 27.09.2024, directing the owner of the above said building to produce the approved plan copy and the documents with respect to the said building.

It is submitted that on receipt of the above said notice Mrs. Lalitha and Mr. Navdeep Kumar viz., the owners of the building in question have submitted the approved plan copy vide Planning Permit in PPA/WDCN08/07232/2023 and Building Approval in BA/WDCNO8/06865/2023 dated 13/10/2023 for construction of residential building consisting of ground floor and first floor with 2 nos. of dwelling units.

It is submitted that thereafter further action has been taken by issuing a Notice of Inspection dated 26.12.2024 informing the owners of the building in question that their building will be inspected on 28.12.2024 at 11.00 a.m. and directed them either to be present at the time of inspection or to depute their authorized representative at the time of inspection.

It is submitted that accordingly the building in question was inspected by the officials of Greater Chennai Corporation on 28.12.2024 and found that the building in question was put up by deviating the approved plan and also constructed the 2nd floor unauthorizedly.

It is submitted that thereafter further action has been taken by issuing a Notice for compliance of Planning Permission in respect of unauthorized development carried out in contravention of Planning Permission dated 06.01.2025 to Mrs. Lalitha and Mr. Navdeep Kumar viz., the owners of the building in question.

It is submitted that on receipt of the above notice Mrs. Lalitha and Mr. Navdeep Kumar have demolised the unauthorized construction put up in the 2nd floor of the building. Thereafter, said Mrs. Lalitha and Mr. Navdeep Kumar have sent a letter dated 18.02.2025 informing that they have filed an Appeal under Section 80-A before the Secretary to Government, Housing and Urban Development Department and requested not to take any coercive action against their building.

It is submitted that the appeal filed by Mrs. Lalitha and Mr. Navdeep Kumar, is still pending before the Housing and Urban Development Department.

It is submitted that the notice issued to Mrs. Lalitha and Mr. Navdeep Kumar, approved plan copy, photographs taken at the time of demolition of the 2nd floor and the appeal copy filed by Mrs. Lalitha and Mr. Navdeep Kumar are annexed herewith for your kind perual." எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 29.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 29.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண்.95, பகுதி எண்.21, மண்டலம் 8ல் உள்ள கதவு எண்.36, சன்னதி தெரு, வில்லிவாக்கம், சென்னை–49 என்கிற முகவரியில் உள்ள கட்டிடம் நான்கு பக்க இடைவெளி இல்லாமலும், கட்டிடத்தின் மேல் தளத்தில் 20 x 20 என்ற அளவில் விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடம் குறித்தும் 10.04.2024 மற்றும் 18.06.2024 நாளிட்ட தேதியில் புகைப்படத்துடன் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர், வட்டார துறை அலுவலர் ஆகியோருக்கு புகார் அளித்தும், நினைவூட்டு கடிதம் அனுப்பியும், இந்நாள் வரை மேற்கண்ட முகவரியில் உள்ள விதி மீறிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடத்தின் உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சியின் பாதாள சாக்கடை இணைப்பினை மூடி அதன் மேல் கார் நிறுத்த தளம் அமைத்துள்ளார். என் மனு மீது 18 மாதங்கள் ஆகியும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலகத்தால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும், இப்புகார் குறித்து மண்டல 8ன் உதவிப்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரை நேரில் சந்தித்து தெரிவித்தும் எந்தவித பலனும் இல்லை. மேலும், கட்டிடத்தின் உரிமையாளர் தனது கட்டிடம் குறித்து மறு சீராய்விற்கான மனு அரசிடம் அளித்துள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவிப்பொறியாளர் தெரிவித்தபோது அதன் நகலினை அளிக்குமாறு கோரினேன். ஆனால், அளிக்க மறுத்துவிட்டார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடம் குறித்து எந்தவித நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை

எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட கட்டிடத்தின் தற்போதைய நிலை தொடர்பான புகைபட நகலினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.''

7. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவிப் பொறியாளர் 29.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை49, வில்லிவாக்கம், சன்னதி தெரு கதவு எண் 36ல் உள்ள கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு, வீட்டின் உரிமையாளருக்கு Notice for production of documents என்ற தாக்கீது 27.9.2024 அன்று வழங்கப்பட்டது. அதன்படி வீட்டின் உரிமையாளர் திருமதிலலிதா மற்றும் திரு நவ்தீப் குமார் ஆகியோர் வரைபட அனுமதி எண் PPA/WDCN08/07232/2023 மற்றும் தரைத்தளத்துடன் கூடிய இரண்டு குடியிருப்புகள் கொண்ட முதல்தளம் கட்டுவதற்கான கட்டிட அனுமதி எண் BA/WDCNO8/06865/23 நாள் 13.10.2023 ஆகியவற்றை சமர்ப்பித்தனர்.

2) மேற்படிகட்டிடம் 28.12.2024 அன்று மீண்டும் கள ஆய்வு செய்யப்பட்டதில் அனுமதிக்கு மாறாக 2வது தளம் கட்டப்பட்டு இருப்பதும் நான்கு பக்கமும் இடைவெளி இல்லாமல் கட்டப்பட்டும் இருப்பதும் மற்றும் விதிமீறல் இருந்ததை கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் Compliance of Planning Permission என்ற தாக்கீது 06.01.2025 அன்று வழங்கப்பட்டது.

3) மேற்கண்ட தாக்கீதை பெற்றபின் வீட்டின் உரிமையாளர்கள் திருமதி.லலிதா மற்றும் திரு நவ்தீப் குமார் ஆகியோர் அனுமதியின்றி கட்டப்பட்ட இரண்டாவது தளத்தினை இடித்துவிட்டதாகவும், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை செயலாளருக்கு மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டதாக தங்களது 18.02.2025 நாளிட்ட கடிதத்தில்தெரிவித்துள்ளனர்.

4) மேற்கண்ட சீராய்வு மனு தற்போதுவரை நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைக்கு தற்போதைய நிலை குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலகத்தால் கடிதம் அனுப்பப்படும் என்றும் மேலும், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை மனுதாரரின் மனு மீது ஆணையிட்ட பின்பு, அவ்வாணைக்கிணங்க உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. இரண்டாம் எதிர்மனுதாரர் முன்னதாகவே புனித யாத்திரை முன்னிட்டு ராஜஸ்தான் செல்ல திட்டமிட்டுள்ளதால், அதனை இரத்து செய்ய இயலாததால், தனக்கு ஜனவரி மாதம் ஒரு நாளில் விசாரணை மேற்கொள்ள ஆணை செய்யுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தனது 27.12.2025 நாளிட்ட இமெயில் மூலம் கேட்டுக் கொண்டார்.

9. எனவே, மேற்கண்ட மனுதாரரின் 03.04.2025 நாளிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இரண்டாம் மனுதாரருக்கு முகவரியிட்டு, மனுதாரர் மற்றும் பெருநகர

சென்னை மாநகராட்சி மண்டலம் 8 மண்டல அலுவலர் ஆகியோருக்கு நகலிடப்பட்டு, 05.01.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

10. இரண்டாம் எதிர்மனுதாரர் திரு. A. நவ்தீப்குமார் என்பவர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"The property at Door No.32 & 34 Sannathi Street, Villivakkam, Chennai-49, was inherited jointly by me and my mother Mrs.Laliltha. The approval for planning permission of Ground Floor +1 was obtained from Greater Chennai Corporation on 18.08.2023 and building permission was obtained on 13.10.2023.

On receipt of Notices dated 27.09.2024 and 26.12.2024 from Greater Chennai Corporation regarding violation, we have demolished the portions of the building which were violative of the Building permission. We have also submitted an appeal petition under section 80A of Town and Country Planning Act,1971 to the Secretary Housing and Urban Development Department, Government of Tamil Nadu, and the same is pending. I also submit that we will oblige by the orders passed by the Government of Tamil Nadu in this regard. I submit Xerox copies of appeal petition submitted to Government and the Acknowledgement received."

11. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர்களாகிய பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் இணை இயக்குநர் / உதவி ஆணையரின் அறிக்கை, உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண்.95, பகுதி எண்.21, மண்டலம் 8ல் உள்ள கதவு எண்.36, சன்னதி தெரு, வில்லிவாக்கம், சென்னை–49 என்கிற முகவரியில் உள்ள கட்டிடம் நான்கு பக்க இடைவெளி இல்லாமலும், கட்டிடத்தின் மேல் தளத்தில் 20 x 20 என்ற அளவில் விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர், வட்டார துறை அலுவலர் ஆகியோருக்கு புகார் அளித்தும், விதி மீறிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிடத்தின் உரிமையாளரால் பெருநகர சென்னை மாநகராட்சியின் பாதாள சாக்கடை இணைப்பினை மூடி அதன் மேல் கார் நிறுத்த தளம் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரின் மனு மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் அலுவலகத்தால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், கட்டிடத்தின் உரிமையாளர் தனது கட்டிடம் குறித்து மறு சீராய்விற்கான மனு அரசிடம் அளித்துள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் உதவிப்பொறியாளர் தெரிவித்தபோது அதன் நகலினை அளிக்குமாறு கோரியும், தனக்கு அளிக்கவில்லை என்பதும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடம் குறித்து எந்தவித நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கண்ட கட்டிடத்தின் தற்போதைய நிலை தொடர்பான புகைபடத்தின் நகல் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை49, வில்லிவாக்கம், சன்னதி தெரு கதவு எண் 36ல் உள்ள கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு, வீட்டின் உரிமையாளருக்கு Notice for production of documents என்ற தாக்கீது 27.9.2024 அன்று வழங்கப்பட்டது. அதன்படி வீட்டின் உரிமையாளர் திருமதி லலிதா மற்றும் திரு நவ்தீப் குமார் ஆகியோர் வரைபட அனுமதி எண் PPA/WDCN08/07232/2023 மற்றும் தரைத்தளத்துடன் கூடிய இரண்டு குடியிருப்புகள் கொண்ட முதல்தளம் கட்டுவதற்கான கட்டிட அனுமதி எண் BA/WDCNO8/06865/23 நாள் 13.10.2023 ஆகியவை சமர்ப்பிக்கப்பட்டது என்பதும், மேற்படிகட்டிடம் 28.12.2024 அன்று மீண்டும் கள ஆய்வு செய்யப்பட்டதில் அனுமதிக்கு மாறாக 2வது தளம் மற்றும் நான்கு பக்கமும் இடைவெளி விடாமலும் விதி மீறி கட்டப்பட்டதை கண்டறியப்பட்டு, அதன் அடிப்படையில் Compliance of Planning Permission என்ற தாக்கீது 06.01.2025 அன்று வழங்கப்பட்டது என்பதும், மேற்கண்ட தாக்கீதை பெற்றபின் வீட்டின் உரிமையாளர்கள் திருமதி.லலிதா மற்றும் திரு நவ்தீப் குமார் ஆகியோர் அனுமதியின்றி கட்டப்பட்ட இரண்டாவது தளத்தினை இடித்துவிட்டதாகவும், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை செயலாளருக்கு மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டதாக தெரிவித்தனர் என்பதும், மேற்கண்ட சீராய்வு மனு நிலுவையில் உள்ளதால், இது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறைக்கு தற்போதைய நிலை குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலகத்தால் கடிதம் அனுப்பப்படும் என்பதும் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை சீராய்வு மனு மீது ஆணையிட்ட பின்பு, அவ்வாணைக்கிணங்க உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் இணை இயக்குநர் / உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

சென்னை–49, வில்லிவாக்கம், சன்னதி தெரு, கதவு எண்.32 மற்றும் 34 என்கிற முகவரியில் மூதாதையரிடமிருந்து வரப்பெற்ற தனக்கும் மற்றும் தனது தாயாருக்கு சேர்ந்து கிடைக்கப் பெற்ற கட்டிடத்தில் தரைத் தளம் மற்றும் முதல் தளம் வரை கட்டிடம் கட்ட பெருநகர சென்னை மாநகராட்சியிடமிருந்து அனுமதி பெறப்பட்டது என்பதும், விதி மீறி கட்டியுள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சியிடமிருந்து தாக்கீது பெறப்பட்டவுடன், கட்டிட அனுமதியினை மீறி கட்டப்பட்ட பகுதி இடிக்கப்பட்டது என்பதும், தங்களது கட்டிடம் குறித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 80–A–ன்படி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் செயலாளருக்கு அளிக்கப்பட்ட சீராய்வு மனு நிலுவையில் உள்ளதாகவும், அத்துறையால் வெளியிடப்படும் ஆணையின்படி செயல்படுவதாகவும் தெரிவித்திருப்பது இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–49, வில்லிவாக்கம், சன்னதி தெரு, கதவு எண் 36–ல் உள்ள கட்டிடத்தில் அனுமதிக்கு மாறாக இரண்டாவது தளம் மற்றும் கட்டிடத்தினைச் சுற்றி நான்கு பக்கமும் இடைவெளி விடாமலும், விதிமீறி உரிமையாளர் கட்டி இருந்ததை பெருநகர சென்னை மாநகராட்சியால் கள ஆய்வு செய்யப்பட்டபோது கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் உரிய தாக்கீது பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ள நிலையில், அத்தாக்கீது குறித்து, கட்டிட உரிமையாளர் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை செயலாளருக்கு மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு நிலுவையில் உள்ளதாகவும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மனுதாரரின் மனு மீது வெளியிடப்படும் ஆணைக்கு ஏற்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன்

உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையிலும், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை மனுதாரரின் மேல்முறையீட்டு மனு மீது வழங்கப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் இணை இயக்குநர் / உதவி ஆணையாளரை அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. T. தயாளமூர்த்தி,
1814, 13வது பிரதான சாலை,
அண்ணா நகர்,
சென்னை–600 040.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
36பி, புல்லா அவின்யூ, செனாய் நகர்,
சென்னை–600 030.

(4) திரு. நவ்தீப்குமார்,
பழைய கதவு எண் 36, புதிய கதவு எண் 34,
சன்னதி தெரு, வில்லிவாக்கம்,
சென்னை–600 049.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல் :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

11/3/26
செயலாளர்.

11/3/26

7/10